# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 11 NOVEMBER-2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-




# பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்வதில்லை

# ஆசிரியர் உரை

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். **சங் 8:4-ல் மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்ற வார்த்தையின்படி ஆண்டவராகிய இயேசு நம்மை நினைத்து, விசாரித்து நம்மை ஆசீர்வதித்து வருகிறார்.** ஆகவே உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள். ஆண்டவருக்கு உங்கள் மீது அக்கறை உண்டு. கடந்த நாட்களில் நடந்த ஜெபங்களில் குறிப்பாக வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் இரண்டாவது சனிக்கிழமை நடைபெற்ற உபவாச ஜெபத்தையும், மதுரையில் மூன்றாவது சனிக்கிழமை நடைபெற்ற எழுப்புதல் உபவாச ஜெபத்தையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். திரளான ஜனங்களை கர்த்தர் கூட்டிச் சேர்த்து இந்த உலகத்தின் அதிபதியை, அந்த காரத்தை அகற்ற ஜனங்களை ஏவி எழுப்பி ஜெபிக்க வைத்தார். இந்த கடைசி காலத்தில் தேவ பிள்ளைகள் கூடி இணைந்து ஜெபிப்பது கண் கொள்ளா காட்சியாக இருக்கிறது. தொடர்ந்து இந்த பத்திரிக்கையை வாசிக்கின்ற நீங்கள் ஜெபங்களில் கலந்து கொண்டு ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம். செப்டம்பர் 18-ஆம் தேதி ஓசூரில் காலையில் அண்ணன் L.ஜோசப் அவர்களின், இயேசு நம்மோடு சபையில் நடைபெற்ற ஆராதனையிலும், மாலையில் சகோதரர். செல்வராஜ் ஒழுங்கு செய்திருந்த ஸ்தோத்திரக் கூட்டத்தையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். தேவ நாமம் மகிமைப்பட்டது. மேலும் இந்த மாத இதழ் பிரிண்டிங்கில் இருக்கும் போது நமது வானத்தின் வாசல் ஜெபமையத்தில் வைத்து சுவிசேஷ பயிற்சி முகாம் நடைபெற்று கொண்டிருந்தது. அதைப் பற்றியதான விவரங்களை நான் அடுத்த இதழில் உங்களுக்கு தெரியப்படுத்துவேன். தேவ கிருபையால் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9 மணிக்கு ஒளிபரப்பாகும் **கர்த்தாவே என்னை கைதூக்கி விடும்** நிகழ்ச்சியும், தினமும் காலை 6 மணிக்கு ஒளிபரப்பாகும் **இயேசுவை தினம் பார்ப்போம்** நிகழ்ச்சியும், சனிக்கிழமை தோறும் இரவு 9.30 மணிக்கு ஒளிபரப்பாகும் **சுவிசேஷ ஒளி** நிகழ்ச்சியும் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெற்று வருகிறது. நம் மீடியா ஊழியத்தில் இன்னும் அதிகமாக நாம் ஈடுபட நமக்கு நிறைய பொருட்கள் தேவைப்படுகிறது. அவைகளை வாங்கவும், ஊழியம் விரிவடையவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். நாங்கள் தேவனுடைய காரியங்களில் ஈடுபடவும், தேவையில்லாத வேலைப்பளு விலகவும் எங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து இந்த ஊழியத்தை உங்கள் ஜெபத்தாலும், காணிக்கைகளினாலும் தாங்கி, ஆதரவளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருந்து நடத்துவதாக.



*இயேசுவின் பணியில்,*

L. Vincent Raj

(சகோ.L.வின்சென்ட்ராஜ்)

# பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்வதில்லை

சகோ.L.வின்சென்ட்ராஜ்



ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த தேவ செய்தியின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவராகிய தேவன் இரத்தம் சிந்தி சம்பாதித்த அவருடைய சபைக்கும், அவருடைய மணவாட்டிக்கும், அவரை ஏற்றுக்கொண்ட அவருடைய பிள்ளைகளுக்கும் கொடுத்த வாக்குறுதி, வாக்குத்தத்தம் தான் இது. பாதாளமோ, பாதாளத்தின் கிரியைகளோ, மனிதர்களோ உங்களை மேற்கொள்வதில்லை என்றார். தேவனுக்கு மகிமையாக அவரை துதித்து, ஸ்தோத்தரித்து, அவரை பணிந்து, ஆராதிக்க உண்டாக்கப்பட்ட, ஏற்படுத்தப்பட்ட தூதன் தான் லூசிபர். அவன் நாளடைவில் அவனுடைய வேலையைச் செய்யாமல், கடமையைச் செய்யமால் ஏமாற்றி நடித்து தேவனுக்கு விரோதமாக சில தூதர்களை குழுவாக ஏற்படுத்தினான். அவனை தேவன் ஆராய்ந்த போது குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது. எசே 28:2-ல் மனுபுத்திரனே, நீ தீருவின் அதிபதியை நோக்கி கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால் உன் இருதயம் மேட்டிமைக் கொண்டு நான் தேவன் சமுத்திரத்தின் நடுவே தேவாசனத்தில் வீற்றிருக்கிறேன் என்று நீ சொல்லி, உன் இருதயத்தை தேவனின் இருதயத்தைப் போல் ஆக்கினாலும், நீ மனுஷனேயல்லாமல் தேவனல்ல என்று சொல்லி, எசே 28:16-ஆம் வசனத்தில் உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்து. நீ பாவஞ்செய்தாய், ஆகையால் நான் உன்னை தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேரூபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப் போடுவேன் என்றார். அப்படித் தள்ளப்பட்ட அந்த கேரூப் லூசிபர் தூதன் தான் லூக்கா 10:18-ல் சொல்லப்பட்ட வார்த்தையின்படி அவர்களை அவர் நோக்கி சாத்தான் மின்னலைப் போல் வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன் என்றார். அவன் உயர வானத்திலிருந்தும், தேவனுடைய பர்வதமாகிய ஏதேன் தோட்டத்திலிருந்தும், உயரமும் உன்னதமுமான இடத்திலிருந்து கீழே தள்ளப்பட்டு, சபிக்கப்பட்டு விழுந்து போனான். அந்த விழுந்து போன பிசாசு

இருந்த இடத்தில் தான் தேவன் மனிதனை உருவாக்கி, தன்னோடு இருக்கவும், தன்னைத் துதிக்கவும், மகிமைப்படுத்தவும் ஏற்படுத்தினார். ஆகவே மனிதன் தேவனைப் பின்பற்றி அவரை மகிமைப்படுத்தி, ஏதேன் தோட்டத்தில் அவரோடு உலாவினான். எபிரே 2:7-ல் அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர், மகிமையினாலும், கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் அவனை அதிகாரியாக வைத்து. சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படி தான் உண்டாக்கின மனிதனை கனத்தினாலும், மகிமையினாலும் முடிசூட்டி அந்த விழுந்து போன சாத்தானின் மேல் ஆளுகை செய்யவும், அவனை அடக்கிப் போடவும், அவனுடைய கிரியைகளை எல்லாம் அழித்துப் போடவும் தேவன் மனிதனை ஏற்படுத்தினார். இதை சற்றும் பொருத்துக் கொள்ள முடியாத சாத்தான், தாங்கிக் கொள்ள முடியாத சாத்தான் எப்படியாவது தேவன் இந்த மனிதனுக்கு கொடுத்த அதிகாரத்தை பறித்துக் கொள்ளவும், தன்னை மனிதன் ஆண்டு கொள்ளாதபடி அவன் அதிகாரத்தைப் பறிக்கவும், தேவன் போல் ஏமாற்றி நடித்து ஆதாமையும், ஏவாளையும் வஞ்சித்தான், ஏமாற்றினான். நீங்கள் கண்கள் திறக்கப்பட்டு தேவர்களைப் போல இருப்பீர்கள் என்றான். எத்தனை நாட்களுக்கு மனிதர்களாய் இருப்பது, எத்தனை நாட்களுக்கு தேவனையே ஆராதிப்பது, உங்களுக்கு துதிபாட, உங்களை பெருமைப்படுத்த ஆட்கள் வேண்டாமா?, உங்களைப் பின்தொடர, உங்களுக்கு கொடி பிடிக்க ஆட்கள் வேண்டாமா? என்று தான் விழுந்து போன இடத்தில் மனிதனும் விழுந்து தேவனைத் தேட முடியாமல், ஜெபிக்க முடியாமல், அவரைப் பணிந்து, ஆராதிக்க முடியாமல் பாதாளத்தின் வாசல்கள் அவனைமேற்கொண்டது. பாதாளத்தின் கிரியைகள், செய்கைகள் அவனை மேற்கொண்டது. அன்றே மனிதன் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டு, நசுக்கப்பட்டு பாதாளத்தின் படுக்கையைப் போட்டுக் கொண்டான். தேவ உறவை, ஆத்துமாவில் உள்ள ஜீவனை இழந்து போனான். சாத்தான் பாதாளத்தின் கிரியைகளால் தேவ பிள்ளைகளை மேற்கொண்டான். அப் 19:15,16-ல் பொல்லாத ஆவி அவர்களை நோக்கி, இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி, பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள் மேல் பாய்ந்து, பலாத்காரம் பண்ணி, அவர்களை மேற்கொள்ள அவர்கள் நிர்வாணிகளும், காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப் போனார்கள். ஆம் நாம் தேவனை விட்டுப் பிரியும் போது, விலகும் போது அசுத்த ஆவிகள், அதன் கிரியைகள் நம்மை மேற்கொண்டு அவனுக்கு நம்மை அடிமைப்படுத்த, நாம் தேவனைத் துதிக்க முடியாமல், மகிமைப்படுத்த முடியாமல், பாதாளத்தின் கிரியைகளால் சூழப்பட்டுத் தாக்கப்படுகிறோம். ஆகவே தான் சங்கீதக்காரன் சங் 115:17-ல் மரித்தவர்களும், மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள். ஆம் பாதாளம் கொடிதான இடம். அழுகையும் பற்கடிப்பும் உள்ள இடம். அந்தகாரம் சூழ்ந்த இடம், அந்த இடத்தில் இருக்கிற யாவரும், தள்ளப்பட்ட யாவரும் மவுனத்தில் வாசம் பண்ணி தேவனை மறந்து போவார்கள். சங் 94:17-ல் கர்த்தர் எனக்குத் துணையாயிராவிட்டால், என் ஆத்துமா சீக்கிரமாய் மவுனத்தில் வாசம் பண்ணியிருக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது. இது தான் பாதாளத்தின் வல்லமை. இப்படியாக வாழ்கிறவர்கள் தான் பாதாளத்தின் வாசல்களால் மேற்கொள்ளப்பட்டு கண்ணீரோடும், வேதனையோடும் துக்கத்தில் வாழ்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு இடத்திற்கு, இந்த பாதாள வல்லடிக்கு ஒரு மனிதன் போய் விடாதபடிக்குத் தான் ஆண்டவராகிய இயேசு பேதுருவைப் பார்த்து சொன்னார் இந்த கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்றார்.

இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே நம் வாழ்க்கை எப்படியிருக்கிறது, நம் பிள்ளைகள் வாழ்க்கை எப்படியிருக்கிறது. நீங்கள் யாரால், எதனால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறீர்கள். பாதாளத்தின் வாசல்கள் உங்களை மேற்கொண்டிருக்கிறதா? அல்லது தேவாதி தேவனுடைய வல்லமை அல்லது அவருடைய வார்த்தை உங்களை மேற்கொண்டிருக்கிறதா? நாம் இப்பொழுது நம்மை ஆராய்ந்து பார்த்து அவருக்கு மகிமையாக வாழ நம்மை அர்ப்பணிக்க வேண்டும். இல்லையென்றால் நாம் மவுனத்தில் வாசம்பண்ணி நம்முடைய காலத்தை இழந்து விடுவோம். அதற்குத்தான் ஆண்டவராகிய இயேசு பேதுருவைப் பார்த்து பாதாளத்தின் வாசல்கள் உன்னை மேற்கொள்வதில்லை என்றார். என் ஆண்டவ-ராகிய தேவன் தாமே உங்களை பாதாளத்தின் வல்லடிக்கு விலக்கிக் காப்பார்.



**அவரே பாதாளத்தில் இறங்கவும், அதிலிருந்து ஏறவும் பண்ணுகிறவர்.**

**1 சாமு 2:6**

நம்முடைய தேவன் யார் நம்மை பாதாளத்திலிருந்து ஏறவும், தப்புவிக்கவும் பண்ணுகிறவர். பூமியில் மனிதர்கள் உயிரோடு வாழும் போது பல பாதாள வல்லமையில் அகப்பட்டு மீளா துயரத்திலிருந்து தப்புகிறார்கள்.

ஆதி 37:35, ஆதி 42:38-ல் நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன் என்றான். இவ்விதமாய் அவனுடைய தகப்பன் யோசேப்புக்காக அழுது கொண்டிருந்தான். காரணம் யாக்கோபின் மற்ற பிள்ளைகள் எல்லாம் யோசேப்புக்கு விரோதமாய் எழும்பி, அவனை உயிரோடே பாதாளக்குழியில் தள்ளினார்கள். எங்களைக் காட்டிலும், எங்கள் தகப்பன் அவனை அதிகமாய் நேசிக்கிறார், அன்பு காட்டுகிறார். இவன் எங்களுக்கு எப்பொழுதும் இடையூராக இருக்கிறான், எதைச் செய்தாலும் தகப்பனிடத்தில் சொல்லி விடுகிறான் என்று யோசேப்புக்கு விரோதமாய் எழும்பி, அவனை அடித்து, துன்புறுத்தி தகப்பனிட-த்திலிருந்து பிரித்து குழியில் தள்ளி, பின்பு தூக்கி எடுத்து, இஸ்மவேலருக்கு இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுவிட்டார்கள். இதைக் கேள்விப்பட்ட யாக்கோபு பல நாட்கள் துக்க-த்தினால் தவித்தான், சாப்பிட முடியவில்லை, தூங்க முடியவில்லை. சில நாட்களுக்கு முன்பு கல்லூரியில் படித்த பிள்ளையை காணவில்லை. அவளுடைய பெற்றோர்கள் எங்கும் தேடியும் அவள் கிடைக்கவில்லை. கடைசியாக காவல்துறையில் புகார் அளித்து தேடினால், அவள் ஒரு வாலிபனோடு ஓடிவிட்டாள், அவன் சரீல்லாதவன், குடிகாரன் என்று தெரியவந்தது. பெற்றோர்கள், உறவினர்கள் அந்த பெண்ணின் காலில் விழுந்து, எப்படியாவது வந்துவிடு அவன் வேண்டாம் என்று கதறினார்கள். அவளோ என் வாழ்க்கையை எனக்குப் பார்த்துக்கொள்ளத் தெரியும் போங்கள் என்று சொல்லி அவர்களைஅவமானப்படுத்தி அனுப்பிவிட்டாள். அவர்கள் சொன்னார்கள் எங்களை உயிரோடு பாதாளத்தில் தள்ளிவிட்டாள் என்று. இதைப்போல இன்னும் பல குடும்பங்களில் சொத்துப் பிரச்சனை, கணவன் மனைவி சண்டை, பிறரால் அபகரிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டு சொத்தை இழந்து, பணத்தை இழந்து, பல நாசமோசங்களுக்கு உள்ளாகி இரத்த கண்ணீர்

வடிக்கிற அநேகரைப் பார்த்திருக்கிறேன். நாங்கள் உயிரோடு பாதாளத்தில் தள்ளப்படுகிறோம் என்கிறார்கள், கதறுகிறார்கள், தாங்க முடியாமல் துடிக்கிறார்கள். மற்றொரு பக்கம் ஒரு மனிதன் தேவனுக்கு விரோதமாய் எழும்பும் போது, துணிகரமாய் பாவம் செய்யும் போது பாதாளத்திற்கு தள்ளப்படுகிறான், போகிறான். எண் 16:30-33-ல் கர்த்தர் ஒரு புதிய காரியத்தை நேரிடச் செய்வதால், பூமி தன் வாயைத்திறந்து, இவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கத்தக்கதாக இவர்களையும், இவர்களுக்கு உண்டான யாவையும் விழுங்கிப் போட்டதேயானால், இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதை அறிந்து கொள்வீர்கள் என்றான். அதேபோல் அவர்கள் தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்கினார்கள், பூமி அவர்களை மூடிக்கொண்டது. காரணம் தேவனுக்கு விரோதமாய் எழும்பி, அவருடைய சபைக்கு விரோதமாய் எழும்பி, தேவனுடைய திட்டத்தைத் தடுக்கவும், அவர் சித்தத்தைத் தடை பண்ணவும் இன்றைக்கு பூமியில் அநேக கோராகின் புத்திரர் எழும்பி இருக்கிறார்கள். இவர் மற்றவர்களின் ஒருமனதை கெடுப்பது, தேவையில்லாமல் ஊழியங்களில் தலையிட்டு தங்கள் வேலையைச் செய்யாமல், தங்கள் காரியத்தை, ஊழியத்தைப் பார்க்காமல் மற்றவர்களை குறைசொல்லி அவர்களை மனம் நோகப்பண்ணுவது போன்ற காரியங்களைச் செய்கிறார்கள். இந்த கடைசி காலத்தில் கிறிஸ்தவத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஒரு வஞ்சிக்கிற கூட்டம் எழும்பி சபையையும், ஊழியங்களையும் பாழாக்கிக் கொண்டிருக்கிறது. இந்த கோராகின் ஆவியுள்ளவர்கள் மோசேக்கு விரோதமாய், தேவனுடைய வழிநடத்துதலுக்கு விரோதமாய்,பரம கானானை அடைய முடியாதபடிக்கு தடைபண்ணினார்கள். எண் 16:3-ல் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டம்கூடி, அவர்களை நோக்கி, நீங்கள் மிஞ்சிப் போகிறீர்கள் சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள், கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே. இப்படியிருக்க, கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்று குழப்பத்தை உருவாக்கி ஒருமனதை கெடுத்து, உறவை முறித்து, பிரிவினையைக் கொண்டு வந்தார்கள். இன்றைக்கு அநேக குடும்பங்களில், வேலைகளில், தொழிலில், ஊழியத்தில் ஒருமனமாய் செய்ய முடியாமல், ஒருவர் செய்கிற ஊழியத்தை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள முடியாமல் நாங்கள் பூரணம், அவர்கள் பாதி என்று குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள். இந்த கடைசி நாட்களில் பூமி தன் வாயைத் திறந்து, அவர்கள் நின்றிருந்த இடம் பிளந்து உயிரோடே அவர்களை மூடிக்கொண்டது. பாதாளம் கொடியது, தேவ கோபம் கொடியது, அவர்கள்தேவ தண்டனையை தங்கள் காலத்திற்கு முன்பே பெற்று விட்டார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார் 1 தீமோத் 5:24-ல் சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும், சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும் என்ற வார்த்தையின்படி நியாயத்தீர்ப்பு வருவதற்கு முன்பே அவர்களுடைய பாவம் முந்திக்கொண்டு உயிரோடே அவர்களை பாதாளத்தில் தள்ளிவிட்டது. எவ்வளவு பயங்கரமானது. இந்த கடைசி காலத்தில் தேவனை மதிக்காத, நேசிக்காத, சுவிசேஷத்திற்கு விரோதமாய் எழும்புகிற எந்த இராஜ்யமானாலும், எந்த மனிதனானாலும் அவர்கள் முடிவு இதுவாகத்தான் இருக்கப் போகிறது. ஆகவே தான் பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் எபிரே 10:31-ல் ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது

> கர்த்தர் ஒரு புதிய காரியத்தை நேரிடச்செய்வதால், பூமி தன் வாயைத் திறந்து, இவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கத்தக்கதாக இவர்களையும் இவர்களுக்கு உண்டான யாவையும் விழுங்கிப்போட்டதேயானால், இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள் என்றான்.
>
> எண்ணாகமம் 16:30

## பாதாளத்தின் திறவுகோலை அவர் கையில் வைத்திருக்கிறார்

பயங்கரமாயிருக்குமே என்று சொல்லப்பட்டுள்ளது. கோராகின் ஆவியுடையவர்கள் ஒருமனதை கெடுப்பவர்கள், ஐக்கியத்தை உடைப்பவர்கள், தவறாய் வேத வசனத்தைச் சொல்லி ஜனங்களை திசை திருப்புகிறவர்கள். இவர்களுக்கு நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். தேவன் பாதாளத்தை மனிதர்களுக்கு ஏற்படுத்தவில்லை. பிசாசுகளுக்கும், அவன் தூதர்களுக்கும் ஏசாயா 38:10-ல் நான் என் பூரண ஆயுசின் வருஷங்களுக்குச் சேராமல் பாதாளத்தின் வாசல்களுக்குட்படுவேன் என்று என் நாட்கள் அறுப்புண்கிறபோது சொன்னேன் என்றார். அவ்வளவு கொடிய வியாதி கேன்சர். அவன் சரீரமெல்லாம் பட்டுப் போயிற்று. இதே நிலை தான் யோபுவுக்கும், அவன் சதை, நரம்பு, எலும்பு எல்லாம்
உலர்ந்து போயிற்று. இரத்த ஓட்டம் இல்லாமல் படுத்தபடுக்கையாகி, பிறர் உதவியில்லாமல் கைவிடப்பட்டு மரித்துப் பிழைத்தான். எசேக்கியா ராஜா அந்தப் பாதையில் தான் கடந்து போனான். வேதம் சொல்லுகிறது சங் 18:5-ல் பாதாளக்கட்டுகள் என்னைச் சூழ்ந்து கொண்டது. மரணக்கண்ணிகள் என் மேல் விழுந்தது என்று பாதாளக்க-ட்டுகளிலிருந்த, மரண கண்ணிகளிலிருந்த அநேகரை தேவன் உயிரோடு எழுப்பி அவர்களைத் தப்புவித்தார். பாதாளத்தின் வாசல்கள் அவர்களை மேற்கொள்ளாமல், உயிரோடு விழுங்கப்படாமல் தேவன் அவைகளில் இருந்து எழும்பி வரப்பண்ணினார். பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ளாமல் அவைகளுக்கு தப்புவித்து மீட்டார், பாதுகாத்தார். ஆகவே தான் பேதுருவைப் பார்த்து பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்வதில்லை என்றார்.

> அதற்கு இயேசு:
> நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்;
> என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.
>
> யோவான் 14:6

மரித்தேன், ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென். நான் மரணத்திற்கும், பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன் வெளி 1:18. மிக அருமையான வார்த்தை இது. இன்றைக்கு வீட்டு திறவுகோல் இருக்கிறது, தேசத்தின் பணம் பாதுகாப்பு திறவுகோல் இருக்கிறது. அணு ஆயுத திறவுகோல் இருக்கிறது. ஆனால் மரித்தேன் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் எனறவர், பரலோக ராஜ்யத்தின் திறவுகோலையும், பாதாளத்தின் திறவுகோலையும் உடையவராக இருக்கிறார். அதனால் தான் அவர் வேதத்தில் பல தடவைகள் சொன்னார், யோவான் 14:6-ல் நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார். நமக்கு வழியும் அவர்தான், சத்தியமும் அவர்தான், ஜீவனும் அவர்தான். அவரிடத்தில் ஆயிரம் திறவுகோல் இருக்கிறது. ஒரு மனிதனுக்கு கண்ணில் அல்லது கைகளின் விரல்களில் உள்ள ரேகை போல மற்றவர்களுக்கு இருப்பதில்லை. இன்றைக்கு பயோமெட்ரிக் கையெழுத்து வந்துவிட்டது. ஆனால் இயேசுவின் திறவுகோல் எப்படிப்பட்ட, பூட்டப்பட்ட, திறக்க முடியாத கதவுகள், பூட்டுகளைத் திறந்துவிடும். காரணம் அவர் மரணத்திற்கும், பாதாளத்திற்கும் உரிய

திறவுகோலை உடையவராக இருக்கிறார். இன்றைக்கு பாதாளத்திற்கு முன் குறிக்கப்பட்டவர்கள், நியமிக்கப்பட்டவர்கள் மனசாட்சியில் வாதிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு என்னை பரலோகம் கொண்டு போகிறவர் யார்? எனக்காக பரலோகத்தில் யார் இருக்கிறார் என்று ஏங்கி அங்கலாய்க்கிறார்கள். சங்89:48-ல் மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்? தன் ஆத்துமாவைப் பாதாள வல்லடிக்கு விலக்கி விடுவிக்கிறவன் யார்? என்று தாவீது கதறினான். நான் ஒரு நாளும் தேவ சமூகத்தை விட்டு விலகி, தள்ளப்பட்டு, தேவனை விட்டு பிரிந்து பாதாளத்திற்குச் சென்று விடக்கூடாது. பல இக்கட்டில் மரண கண்ணியில் எதிரிகளின் யுத்தத்தில் தாவீது கெஞ்சி தேவனை நோக்கி ஏங்கினான். சங் 49:15-ல் ஆனாலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார், அவர் என்னை ஏற்றுக்கொள்வார். ஏனென்றால் அவரிடத்தில் தான் பாதாளத்தைச் ஜெயித்த, மேற்கொண்ட திறவுகோல் இருக்கிறது. அவர் வழியாய்த் தான் நாம் பாதாள வல்லடிக்கு தப்பமுடியும். இதற்காகத்தான் இயேசு சிலுவையில் பாடுபட்டு இரத்தம் சிந்தி அடக்கம் பண்ணப்பட்டு, யோனா மீனின் வயிற்றில் மூன்றுநாள் இருந்தது போல இருந்தார். பூமியிலிருந்து அடக்கம் பண்ணப்பட்ட அந்த நாளிலே அவர் ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டு, பாதாளத்திற்குச் சென்று பிசாசினால் காவல் காக்கப்பட்டு, சிறைப்படுத்தப்பட்டு நித்தியத்திற்கு போக முடியாதா என்று ஏங்கிக் கொண்டிருந்த ஒவ்வொருவருக்கும் பிரசங்கம் பண்ணி, இரட்சிப்பை பற்றிச் சொல்லி நானே வழி, நானே சத்தியம், நானே ஜீவன் என்று பிரசங்கித்தார். 1 பேதுரு 3:18-20-ல் அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க்காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார், அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே நீடிய பொறுமையோடே காத்திருந்தவர்களுக்கு தேவன் பிரசங்கித்து, பாதாளத்தில் படுக்கை போட்ட அவர்களை மீட்டுக் கொண்டு வந்தார். அவர் மட்டும் உயிரோடு எழுந்திருக்கவில்லை, அந்த காவலில் இருந்த அத்தனை பேரையும், பாதாளத்தின் வல்லடிக்குத் தப்பி அவர்களை உயிரோடு எழுப்பினார். மத் 27:52,53-ல் கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்த பின்பு, இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள். பாதாளத்தின் வல்லடிக்கு மனுக்குலத்தைத் தப்புவித்து, காவலில் பிசாசினால் கண்காணிக்கப்பட்ட, அடைக்கப்பட்டிருந்த அநேக ஆத்துமாக்களை ஆண்டவராகிய இயேசு மீட்டுக் கொண்டார். அவர்கள் நித்தியவாசிகளும், பிதாவின் பிள்ளைகளுமாகினார்கள். ஆகவேதான் அவர் தமது மரணத்தினால் பிசாசை அழித்ததினால், பாதாளத்திற்குச் சென்று கொண்டிருந்தவர்களும் நித்திய இரட்சிப்பை பெற்று, நித்திய சுவிசேஷத்தை அறிவித்தார்கள். இன்றைக்கு அந்த திறவுகோல் அவரிடத்தில் தான் இருக்கிறது. அந்த சாவி அவரிடத்தில் தான் இருக்கிறது. அவர் தான் மரணத்திற்கும், பாதாளத்திற்கும் திறவுகோலை உடையவராயிருக்கிறார். அந்த இயேசு யாரெல்லாம் இந்த சத்தியத்தை






அறிந்து, உணர்ந்து அவரை நோக்கி கூப்பிடுகிறார்களோ, உதவியை நாடுகிறார்களோ அத்தனை பேர்களுக்கும், அவர் மரணத்திற்கும், பாதாளத்திற்கும் உரிய திறவுகோலாய் இருந்து அவர்களைத் தப்புவிக்கிறார். ஆகவே தான் அவர் சொன்னார் ஓசியா 14:13-ல் 1 கொரி 15:55-ல் மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே உன் ஜெயம் எங்கே என்றார்.
இன்றைக்கு இந்த மரணத்தை பரிகரித்து பாதாளத்தை ஜெயித்த இயேசு உயிர்த்தெழுந்திருக்கிறார். அவர் சகல திறவுகோலையும் உடையவராய் இருக்கிறார். இந்த செய்தியை வாசிக்கின்ற உங்கள் அத்தனை பேருக்கும் பரலோக ராஜ்யத்தின் திறவுகோலைக் கொடுத்து பாதாளத்தின் திறவுகோலாய் இருந்து அதற்கு உங்களை விலக்கி, தப்புவித்து, பாதுகாத்து பாதாளத்தின் வாசல்கள் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் மேற்கொள்ளாமல் பாதுகாப்பாக அவருக்கு முன்பாக நிறுத்தி உயர்த்துவாராக.



## முக்கிய அறிவிப்பு !

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகைக் கடந்த 25 வருடத்திற்கு மேலாக அச்சடிக்கப்பட்டு வெளிவந்தது.இப்பொழுது பத்திரிக்கை அச்சடிக்கப்படுவதற்க்கு மட்டும் மாதம்தோறும் ரூ 50,000-க்கு மேல் செலவு செய்யப்படுகிறது.இதனால்,வருகிற மாதம் முதல் பத்திரிக்கை அச்சடிப்பைக் குறைத்து **Digital** முறையில் நம்முடைய இணையதளம் **www.jesuslives.in/resoruces** மற்றும் அனைத்து இயேசு வாழ்கிறார் சமூக வலைத்தளங்களில் வெளிவரும் அதில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
உங்கள் வாட்சப்பில் மாதந்தோறும் பெற 9442800449 என்ற எண்ணிற்கு **"Send Magazine"** என **Type** செய்து அனுப்பினால் மாதந்தோறும் உங்களுக்கு பத்திரிக்கை அனுப்பப்படும்.

**TO DOWNLOAD MAGAZINE**



# என் மகிமையின் ஆலயத்தை மகிமைப்படுத்துவேன்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள். நாம் கர்த்தரை மகிமைப்படுத்துவது எத்தனை பெரிய சிலாக்கியம். ஏசாயா 60:7-ல் என் மகிமையின் ஆலயத்தை மகிமைப்படுத்துவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். மனிதர்கள் கைகளால் கட்டப்பட்ட ஆலயங்களில் தேவன் வாசம் பண்ணுகிறதில்லை. வெளி 21:3-ல் இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்தில் அவர் வாசமாயிருப்பார் என்று வாசிக்கிறோம். 1 கொரி 3:16,17-ல் நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனைத் தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம் என்று பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறார். தேவனுடைய ஆலயமாயிருக்கிற நம்மை தேவன் மகிமைப்படுத்துவேன் என்கிறார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது, நீங்களே அந்த ஆலயம் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். அவர் நம்மை நினைத்திருக்கிற வண்ணமாய் நாம் இருக்கிறோமா? பரிசுத்தத்தில் நம்மை காத்துக் கொண்டவர்களாய் இருக்கிறோமா? என்று யோசித்துப் பார்த்தால் நம்மில் அநேகர் இல்லை. குறைவுபட்டிருக்கிறோம் என்று தான் சொல்லமுடியும். நாம் எல்லாரும் பூரணர் அல்ல, பூரணராகும்படி கடந்து போய் கொண்டிருக்கிறோம்.

# மகிமைப்படுத்துவேன் நீ சிறுமை அடைவதில்லை

நாம் பல்வேறு காரியங்களில் சிறுமை அடைகிறோம். வேதத்தில் தன்னை உயர்த்தின பரிசேயன் தாழ்த்தப்பட்டான். எனவே நாம் ஆண்டவருக்கு முன்பாகவும், மனிதர்களுக்கு முன்பாகவும் தாழ்மையாக நடக்க வேண்டும் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். தானி 4:37-ல் அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று நேபுகாத்நேச்சர் எழுதி வைத்தான். நாம் நம்மை தாழ்த்தி, தாழ்மையாய் தேவனுடைய கட்டளைகளின்படி வாழாமல் மீறி நடக்கிற போது மகிமைப்படுத்துவதற்குப் பதிலாக தாழ்த்தப்படுப் போகிறோம். அப்படிப்பட்ட நமக்குத் தான் மகிமையைத் தந்து நம்மை மகிமைப்படுத்துகிறார். ஏசாயா 59:1,2-ல் இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை, கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது என்று ஏசாயா எழுதுகிறார். நாம் எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாய் போனோம் என்று ரோமர் 3:23-ல் வாசிக்கிறோம். தானி 5:20-ல் நேபுகாத்நேச்சார் இருதயம் மேட்டிமையாகி, அவருடைய ஆவி கர்வத்தினாலே கடினப்பட்டபோது அவர் தமது சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டார். அவருடைய மகிமை அவரைவிட்டு அகன்று போயிற்று. சாமுவேல் நாட்களில் ஏலி ஆசாரியனாயிருந்தான் 1 சாமு 3:1-ல் சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் ஏலிக்கு முன்பாக கர்த்தருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தான். அந்நாட்களிலே கர்த்தருடைய வசனம், வார்த்தை அபூர்வமாயிருந்தது. பிரத்தியட்சமான தரிசனம் இருந்ததில்லை. ஊழியம் நடந்து கொண்டிருந்து, கர்த்தருடைய வசனம் அபூர்வமாய் அங்கொன்றும், இங்கொன்றுமாய் இருந்தது. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கக்கூடாத நிலையும் இருந்திருக்கிறது. தரிசனம் முற்றிலும் இல்லாமல் போய்விட்டது. அதினிமித்தம் ஏலியின் கண்கள் இருளடைந்திருந்ததால் அவனால் பார்க்க முடியவில்லை. அவன் குமாரரோ துணிகர பாவச்செயலில் ஈடுபட்டார்கள். விபச்சாரம், வேசித்தனம், இச்சிக்கிறது, துணிவாய் நடந்தது. அதினிமித்தம் தேவகோபம் இஸ்ரவேலின் மேல் மூண்டது. ஒரு யுத்தத்தில் ஏலியின் குமாரர் மரித்தார்கள். அதைக் கேட்ட ஏலியும் மரித்தார், தேவனுடைய பெட்டி பிடிபட்டு போயிற்று. அதனால் ஏலியின் மருமகள் பிரசவிக்கும் போது 1 சாமு 4:21,22-ல் அவள், மகிமை இஸ்ரவேலை விட்டுப் போயிற்று என்றாள். பாவம் தேவ மகிமையை இழக்கப்பண்ணுகிறது.

> அவருடைய இருதயம் மேட்டிமையாகி, அவருடைய ஆவி கர்வத்தினாலே கடினப்பட்டபோது, அவர் தமது சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டார்; அவருடைய மகிமை அவரைவிட்டு அகன்றுபோயிற்று.
>
> தானியேல் 5:20

யாக்கோபுடைய வாழ்க்கையைப் பாருங்கள் சொந்த சகோதரனை ஏமாற்றி அவனுடைய ஆசீர்வதத்தை அபகரித்து, மாமன் வீட்டிற்குப் போய் வேலை செய்தான். சாப்பாடு கிடைத்தது,மனைவிகள், பிள்ளைகள், வேலைக்காரிகள்,ஆடு, மாடுகள் திரளான

சொத்து, இரண்டு பரிவாரங்கள் நிரம்பின மனிதனாய் இருந்தாலும் தேவ மகிமையற்றவனாகவே இருந்தான். அவன் எப்பொழுது தனித்து தேவனைச் சந்தித்து தன் உண்மை நிலையை சொல்லி ஜெபித்தானோ அப்பொழுது தான் யாக்கோபு இஸ்ரவேலாய் மாறி மகிமைப்படுத்தப்பட்டான். அவனுக்கு எதிராய் வந்த அனைத்தும் சாதகமாய் மாறினது. இஸ்ரவேலாய் மாறின பிறகும் சில உபத்திரவங்கள் வழியாய் அவனுடைய மகிமை பாதிக்கப்பட்டது. நான் தான் இஸ்ரவேலாய் மாறிவிட்டேனே! எனக்கு ஏன் இந்த மகிமையில் பாதிப்பு! என் பெயரில் களங்கம் என்று கலங்கியிருப்பான்,

நாகூம் 2:2-ல் வெறுமையாக்குகிறவர்கள் அவர்களை வெறுமை-யாக்கி, அவர்களுடைய திராட்சைக்கொடிகளைக் கெடுத்துப் போட்டாலும் கர்த்தர் யாக்கோபின் மகிமையைத் திரும்பி வரப்பண்ணுவது போல இஸ்ரவேலின் மகிமையையும் திரும்பி வரப்பண்ணுவார் என்ற வார்த்தையின்படி அவன் வாழ்வில் இருந்த சின்னச் சின்னத் தவறுகளை நீக்கினார். இரண்டு மனைவிகளையும், அவர்கள் பிள்ளைகளையும் ஒரே மாதிரி நேசித்திருக்கவில்லை. ராகேலை தனித்துவமாய் நேசித்து, யோசேப்புக்கு விசேஷித்த அங்கியை செய்து கொடுத்திருந்தான், எகிப்துக்கு தானியம் வாங்க எல்லாரையும் அனுப்பியிருந்தாலும் பென்யமீனை அனுப்பவில்லை தன்னோடு வைத்துக் கொண்டான், தனிப்பாசம் அவன் மீது வைத்தான். இப்படி சிறுசிறு காரியங்களில் இருந்த தவறுகளை நீக்கி, காணாமற்ப் போன மகனைக் காணவும், பிரிவுகள் மாறவும், மகனோடு சேர்ந்து குறைவில்லாமல் போஷிக்கப்படவும், மகிமையாய் கடைசி மூச்சை விடவும், தேவன் இஸ்ரவேலின் மகிமையைத் திரும்பி வரச்செய்து யாக்கோபை, இஸ்ரவேலை மகிமைப்படுத்தினார். ஏசாயா 59:20-ல் மீட்பர் சீயோனுக்கும், யாக்கோபிலே மீறுதலைவிட்டுத்திரும்புகிறவர்களுக்கும், வருவார் என்று கர்த்தர் சொல்லுகிறார். மீறுதல்களை விட்டு திரும்புகிறவர்களிடத்தில் மீட்பர் வருவார். இந்த அதிகாரத்தில் மேலே உள்ள வசனங்களை வாசிக்கிற போது எங்கள் மீறுதல் உமக்கு முன்பாக மிகுதியாயிருக்கிறது. எங்கள் பாவங்கள் எங்களுக்கு விரோதமாய் சாட்சி சொல்கிறது. எங்கள் மீறுதல்கள் எங்களோடு இருக்கிறது. எங்கள் அக்கிரமங்களை அறிந்திருக்கிறோம். கர்த்தருக்கு விரோதமாய் பொய்பேசி எங்கள் தேவனை விட்டுப் பின்வாங்கினோம். கொடுமையாகவும், கலகமாகவும் பேசினோம், கள்ள வார்த்தைகளை கர்ப்பம் தரித்து இருதயத்திலிருந்து பிறப்பிக்கப் பண்ணினோம் என்று ஒரு பாவ அறிக்கையை நாம் பார்க்கிறோம். கர்த்தருக்கு விரோதமாய் கலகமாகவும், கொடுமையாகவும் பொய்பேசி எங்கள் தேவனை விட்டுப்பின்வாங்கிப் போனோம். இந்தவிதமான உண்மையான பாவ அறிக்கையும், மீறுதலை விட்டு திரும்புகிறதையும் கண்டு கர்த்தர் மனதுருகி சீயோனிடத்தில் வருவார்.



ஆகாய் 2:7-ல் சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன்,சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார். இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். ஏசாயா வாழ்வில் இவ்விதமாய் குறைபாடு இருந்த போது

ஏசாயா 6:1-8 வரை கேரூபீன்கள், சேராபீன்கள் சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர் பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டு சொன்னார்கள். அந்த இடம் மகிமையால் நிறைந்ததால் ஏசாயாவின் உதடுகளில் உள்ள அசுத்தத்தை உணர்ந்து ஐயோ! அதமானேன், அசுத்த உதடுகளுள்ள மனுஷன் நான், சேனைகளின் ராஜாவை என் கண்கள் கண்டதே என்றான். அக்கினி தழலை எடுத்துக் கொண்டு வந்து ஒரு தூதன் அவன் உதடுகளைத் தொட்டு உன் அக்கிரமம் நீங்கி உன் பாவம் நிவிர்த்தியானது என்றான். அதன் பிறகு இதோ அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும் என்று சொல்லி தன்னை அர்ப்பணித்து மகிமையான பணியை செய்ததைப் பார்க்கிறோம். நீங்கள் கூட எதினிமித்தம் சிறுமையின் பாதையில் போய்க்கொண்டிருக்கிறேன் என்று சொல்லுகிறீர்கள். எரே 30:19-ல் அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன், அவர்கள் குறுகிப்போவதில்லை என்று ஆண்டவர் சொல்கிற வார்த்தையின்படி சீயோன் விசாரிப்பற்றவள், தள்ளுண்டவள் என்று சொல்கிற உங்கள் வாழ்வின் காயங்களை ஆற்றி உங்களையும் ஆண்டவர் மகிமைப்படுத்துவார். நீங்கள் சிறுமைப்படுவதில்லை.

> உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது.
>
> ஏசாயா 6:1

## கர்த்தர் கிருபையும் மகிமையும் அருளுவார்

நமது தேவன் மகிமை நிறைந்தவர், மகிமையின் ராஜா, சேரக்கூடாத ஒளியில், மகிமையில் வாசம் பண்ணுகிறவர். சங் 84:11-ல் தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர். கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். சங்கீதக்காரன் சொல்கிறார் நமக்கு அவர் கிருபையையும் மகிமையையும் அருளுவார் என்று. சங் 8:4,5-ல் மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன், நீர் அவனைத் தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர். மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர் என்று சொல்கிறான். மனுஷர்களாகிய நம்மை தேவன் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டுகிறார். யாத் 33:18-ல் மோசே, உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்றான். அந்த மகிமையைப் பார்க்க வாஞ்சித்தான். யாத் 24:15-18 வரை வாசித்தால் மோசே மலையின் மேல் ஏறினபோது ஒரு மேகம் மலையை முழுவதும் மூடிற்று. கர்த்தருடைய மகிமை சீனாய் மலையின்மேல் தங்கியிருந்தது. மேகம் ஆறுநாள் மலையை மூடியிருந்தது. ஏழாம் நாளில் கர்த்தர் மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் நகூப்பிட்டார். மலையின் கொடுமுடியிலே கர்த்தருடைய மகிமையின் காட்சி இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினியைப்போல இருந்தது. இரவும் பகலும் நாற்பதுநாள் அந்த மகிமையின் மேகத்தில் இருந்தான் என்று வாசிக்கிறோம். அதே மகிமையின் தேவன் நமக்கும் அந்த மகிமையைத் தருகிறார். அது சூரியனின் மகிமையை விட பல மடங்கு மகிமை. இதை சாதாரண மனிதர்களாகிய நமக்குத் தருகிறாரே! எத்தனை மேன்மை. சங் 27:4-ல் தாவீது கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் அவருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே

நாடினான். சாலமோனுக்கு ஆண்டவர் தரிசனமாகி நீ விரும்பிவதைக் கேள் என்றபோது அவன் ஞானத்தைக் கேட்டான். 1 ராஜா 3:13-ல் ஆண்டவர் அந்த ஞானத்தைக் கொடுத்து, நீ கேளாத ஐஸ்வரியத்தையும், மகிமையையும் உனக்குத் தந்தேன் என்றார். இன்றைக்கு அவருடைய மகிமையினால் நம்மை அவர் மூடுவார். தம் மகிமையை நமக்கும் அருளுவார். மோசேயைப் போல தாவீதைப் போல இந்த மகிமையை எனக்கு காண்பியும், எனக்கும் தாரும் என்று கேளுங்கள். ஆதாமையும்,ஏவாளையும் இந்த மகிமை மூடியிருந்தது.நாம் எந்த அளவு பரிசுத்தத்தை வாஞ்சிக்கிறோமோ, எந்த அளவு தேவனைத் தேடுகிறோமோ அந்த அளவு மகிமை நம்மையும் மூடும்.



சாலமோன் இந்த மகிமையை அவன் கேட்கவில்லை ஆனால் ஆண்டவர் அவன் கேளாத மகிமையைக் கொடுத்தார். 2 நாளா 7:1. சாலமோன் ஜெபம்பண்ணி முடிக்கிறபோது அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும், மற்றப்பலிகளையும் பட்சித்தது. கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று என்று வாசிக்கிறோம். இந்த மகிமையைத் தான் தேவன் நமக்கு கொடுத்து நம்மை மகிமைப்படுத்துவேன் என்கிறார். எத்தனை சந்தோஷம், நான் மகிமையினால் நிறைந்திருந்தேன், அவர் என்மேல் வைத்த மகிமையினால் என் கீர்த்திபெரியதாயிருந்தது. ஆனால் இன்றைக்கு இந்த மகிமையை நான் இழந்துவிட்டேன் என்னால் அவர் மகிமையின் பிரசன்னத்தை உணர முடியவில்லை என்று சோர்ந்து போயிருக்கிறீர்களா? மனம் கலங்காதீர்கள்.புத்தி அவருக்குத் திரும்ப வந்து, தேவனை உயர்த்திபுகழ்ந்து, ஸ்தோத்தரிக்க ஆரம்பித்த உடனே என் ராஜ்யபாரத்தின் மேன்மைக்காக என் மகிமையும், என் முகக்களையும் எனக்குத் திரும்பி வந்தது. என் மகிமை எனக்கு திரும்பி வந்தது என்று சொல்கிறார் பாருங்கள். உங்களுக்கும் தேவன் இந்த மகிமையை திரும்பக் கொடுப்பார். உங்களைத் தாழ்த்தி தேவனை மகிமைப்படுத்தி ஸ்தோத்தரியுங்கள். திரும்ப தேவன் மகிமையினால், தமது பிரசன்னத்தால் நம்மை மூடுவார். எண் 14:21-ல் பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். பூமி முழுவதும் நிறைந்திருக்கிற மகிமை நம்மையும் நிரப்பும். எபே 1:17-ல் பவுல் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும், மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும், தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன் என்றார். மகிமையின் பிதாவை, நம்மை மகிமைப்படுத்துகிறவரை நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஞானத்தையும், தெளிவையும் தர வேண்டுதல் செய்கிறார். இதுவரை நாம் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்துப் போட்டிருந்தாலும், வெறுமையாக்குகிறவர்கள் நம்மை வெறுமையாக்கி நம்மை கெடுத்துக் போட்டிருந்தாலும் ஆண்டவர் நம் மகிமையை திரும்பி வரப்பண்ணி தம் மகிமையின் ஆலயமாகிய நம்மைக் கொண்டு செய்ய நினைத்ததை செய்து நம்மை மகிமைப்படுத்துவார். எழும்பி பிரகாசி உன் ஒளி வந்தது, கர்த்தரின் மகிமை உன்மேல் உதித்தது, அவருடைய மகிமை உன்மேல் காணப்படும் என்று ஏசாயா எழுதியது நம் வாழ்வில் நிறைவேறுவதாக.

மதுரையில்

# எழுப்புதல் உபவாச ஜெபம்




விக்கிரக கிரியைகளிலிருந்து மதுரை பட்டணத்தை தேவன் விடுதலையாக்கவும், பட்டணம் ஆசீர்வதிக்கப்படவும் கடந்த செப்டம்பர் மாதம் 17-ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற எழுப்புதல் உபவாச ஜெபத்தை தேவன் நிறைவாய் ஆசீர்வதித்தார். கூட்டத்தின் ஆரம்பத்திலிருந்து முடிவு மட்டும் தேவன் தம் மகிமையின் பிரசன்னத்தினால் தேவ ஊழியர்களையும், தேவ ஜனங்களையும் நிறையச் செய்தார். சகோதரி. கலா வின்சென்ட்ராஜ் அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை மூலம் மக்களை தேவ வல்லமைக்குள் நடத்தினார்கள். தேவ வல்லமை அந்த இடம் முழுவதையும் நிரப்பிற்று. திரளான மக்களை தேவன் கூட்டிச் சேர்த்து மதுரையின் ஆசீர்வாதத்திற்காகவும், எழுப்புதலுக்காகவும் பாரத்தோடும், கண்ணீரோடும் ஜெபிக்க வைத்தார். நம் சகோதரர் வின்செண்ட்ராஜ அவர்கள் மக்களை இன்னும் அதிக பாரத்தோடு ஜெபிக்கும்படி ஜெபத்தில் வழிநடத்தினார்கள். சத்துருவின் அரண்களை நிர்மூலமாக்கத்தக்கதாக தேவ பெலத்தால், வல்லமையால் மக்களை தேவன் நிரப்பினார். இறுதியாக சகோதர். ஸ்டீபன் அவர்கள் கொடுத்த தேவ வார்த்தையின் மூலம் ஜெபத்திற்கு வந்த மக்கள் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலையையும், சரீர சுகத்தையும், தேவ ஆசீர்வாதத்தையும் பெற்றுச் சென்றார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.




# ஆசையாய்த் தொடர்ந்து ஓடு

சகோதரி.பிரேமா டேவிட்

நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்" பிலி 4:12

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி தங்கைகளே, பந்தயப்பரிசாகிய பரலோகத்தை நோக்கி, நம்மை அழைத்த நம் ஆண்டவரும், தந்தையுமான இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அது 16 வயதுக்குட்பட்டவர்களுக்கான ஜீனியர் கிரிக்கெட் மேட்ச். இதில் முதலிடம் பெற்றால் இந்திய கிரிக்கெட் டீமில் இடம் பிடிக்க வாய்ப்பு. நரேன் ஓய்வு அறையில் ஷீ மாட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது பயிற்சியாளர் பதட்டமாக ஓடிவந்தார். 'நரேன் உனக்கு ஒரு சோக செய்தி, உன் தகப்பனார் இறந்துபோய் விட்டார்' என்றார். நரேன் சிறிது நேரம் அமைதியாக நின்றான். பின்பு தலையை உலுக்கியபடி, சார், நான் விளையாட விரும்புகிறேன் என்று மைதானத்திற்குச் சென்றான். வெறித்தனமாக ஒவ்வொரு பந்தையும் அடித்து நொறுக்கினான். தமிழ்நாடு டீம் ஜெயித்தது. **Man of the match** வாங்கி வந்த அவனிடம், கேட்டாங்க எப்படிப்பா இது சாத்தியமாயிருந்தது? என்று கேட்டபொழுது அவன், ஐயா, எனக்கு அப்பா மட்டும் தான், அவருக்குக் கண் பார்வை கிடையாது. கஷ்டப்பட்டு என்னை வளர்த்தார்.

நான் பலமுறை match-ல் ஜெயித்து வரும்போது, "மகனே நீ விளையாடுவதை என்னால் பார்க்க முடியவில்லையே!" என வருந்துவார். ஆனால் இன்று அவர் பரலோகம் சென்றுவிட்டார். அவருடைய கண்கள் திறக்கப்பட்டிருக்கும். நிச்சயம் என் ஆட்டத்தை முதன் முறையாக பார்ப்பார் என்கிற நம்பிக்கை எனக்குள் வந்தது. ஆகவே உத்வேகத்துடன் விளையாடினேன் என்றான். இதை வாசிக்கிற அருமையான தம்பி, தங்கையே, றபரலோகத்தை நோக்கி, ஒரு நல்ல எதிர்காலத்தை நோக்கி, ஒரு இலட்சியத்தை அடைய வேண்டும் என்று ஓடிக்கொண்டிருந்த உங்களுடைய வாழ்க்கையை எது தடைசெய்கிறது? உங்களை வருத்தப்படுத்தி உங்களை பாதியிலே நின்றுவிடச் செய்தது என்ன? ஆண்டவரை விட்டே விலகி பின்னோக்கி ஓடச்செய்தது எது? உலகப்பிரகாரமான வெற்றிக்காகவும், கண் பார்வையில்லாமல் கஷ்டப்பட்டு தன்னை வளர்த்த தகப்பனாரின் சந்தோஷத்துக்காகவும் ஆசையாய் ஓடி ஜெயித்த இந்த வாலிபன் எவ்வளவு பெரிய முன்னுதாரணம். அக்கினியும், கந்தகமும் எரிந்து கொண்டிருக்கிற நரகத்திற்குப் போய் விடாமல், நிரந்தரமான, மகிழ்ச்சியான, பரலோகத்திற்கு நாம் வர வேண்டும் என்பதற்காக சிலுவையிலே பாடுபட்டு தன் உயிரையே கொடுத்த இயேசுவின் சந்தோஷத்திற்காக உங்கள் ஓட்டத்தை ஓட, இந்த உலகத்திலே வாழ உங்களை அவரிடம் ஒப்புக்கொடுக்கமாட்டீர்களா? அவரை விட்டு உங்களைப் பிரிக்கிற எதையும் உதறித்தள்ளமாட்டீர்களா? பவுல் சொல்லுகிறார் "நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதைப் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய் ஓடுகிறேன்" பிலி 3:12 அதற்காக ஒன்று செய்கிறேன் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, இலக்கை நோக்கி ஓடுகிறேன். பிலி 3:13,14. யூதமார்க்கத்தில் மிகவும் தேறினவராய், செல்வாக்குடன் பெருமையுடன் வாழ்ந்த அவர் அவற்றையெல்லாம் ஒரு குப்பையைப் போல நினைத்து, அவருக்கு சந்தோஷமாகவும், லாபமாகவுமிருந்த அனைத்தையும் வேண்டாம் என்று விட்டுவிட்டு பரிசுப் பொருளாகிய இயேசுவை, பரலோகத்தை அடையும்படி எவ்வளவு கஷ்டங்கள், (கவர்ச்சிகள்) வந்தபோதும் ஆசையாய்த் தொடர்ந்து ஓடினார். நல்ல போராட்டத்தை போராடினேன். ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார், எனக்கு மாத்திரமல்ல அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் 2 தீமோ 4:7,8 பவுலைப் போல நீங்கள், நான் நல்ல ஓட்டத்தைத்தான் ஓடுகிறேன் என்று உண்மையாகச் சொல்லமுடியுமா? உங்கள் மனச்சாட்சியையும் மழுங்கப்பண்ண வைத்து, நான் செய்தது, செய்வது எல்லாம் சரி என்ற போக்கிலே ஓடிக்கொண்டிருப்பீர்களானால் நீங்கள் இப்போதே மனம்வருந்தி, மனந்திருந்தி ஆண்டவரிடம் உங்களை ஒப்புக்கொடுங்கள். நெருப்பு தன்னை அழித்துவிடும் என்று அறியாமல் விட்டில் பூச்சி அதில் சிக்கியழியுமோ, அது போல நீங்கள் சிக்கிக்கொண்ட தவறான நட்புகள், பாவங்களிலிருந்து விலகி இயேசுவை நோக்கி ஆசையாய் ஓடுங்கள். இதுவரை தவறினதை, தவறுகளை தப்பிதங்களை ஆண்டவரிடம் சொல்லி மன்னிப்புப், பெற்று அதை மறந்துவிடுங்கள். தகப்பன் பிள்ளைக்கு இரங்குவது போல நம் ஆண்டவரும் உங்களுக்கு இரங்கி உங்கள் பாவத்தை மன்னித்து மறந்து விடுவார். உங்களைச் சுற்றிலும் இருப்பவர்களும் மன்னித்து மறந்து விடுவார்கள். எனவே அதைப்பற்றிக் கவலைப் படவேண்டாம். செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று. பின்னான, பழைய பாவ வாழ்க்கை ஓட்டத்தை வெறுத்து, மறந்து விட்டுவிட்டு, முன்னான நல்ல, பரலோகம், இயேசுவை நோக்கி ஓட்டத்தைத் துவங்குங்கள். நிச்சயம் நீதியின் கீரிடம், வெற்றி உங்களுக்கு உண்டு. ஆசையாய்த் தொடர்ந்து ஓட ஆண்டவர் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக!. ஆமென்.






சிறுவர் பகுதி

அன்பு செல்வங்களே! எப்படி இருக்கீங்க?, பத்திரமா இருக்கீங்க என்று நம்புகிறேன்!. ஆமாம், இயேசப்பா அவருடைய பிள்ளைகளாகிய நம்மை தமது உள்ளங்கையில் வரைந்து வைத்திருப்பதினால் நாம் பத்திரமாய் வாழ்வது நிச்சயம். சரி கதைக்குப் போகலாமா? ஒரு சிறிய ஊர். அதிலே ஒரு சிறிய குடும்பம், கணவன் இல்லாத அக்குடும்பத்தை தாய் வெகு சிரமத்துடன் நடத்தி வந்தாள், அவர்களுக்கு ஜிங்கிள், ரிங்கிள் என்று இரு குட்டிப் பிள்ளைகள் உண்டு. அவர்கள் வேறு மாநிலத் திலிருந்து வந்தபடியால் அவர்களுக்கு நம் ஊரைப்பற்றி எதுவும் அதிகம் தெரியாது. ஆகவே பள்ளி விட்டால் வீடு, பின்பு டியூசன் சென்று வீட்டிலே தான் இருக்க வேண்டும். குடும்பத் தேவையின் காரணமாக அம்மா வேலைக்கு போய்விட்டு பிள்ளைகள் வரும் நேரம்தான் வருவார்கள்.





**Sunday** என்றால் எல்லோருக்கும் மகிழ்ச்சி. **Sunday School** செல்வது! அங்கு சொல்லிக் கொடுக்கும் கதை, வசனம், போதனைகள் தான் அவர்களுக்கு ஆறுதல் ரிங்கிளுக்கு ஊரைச் சுற்றிப் பார்க்க ரொம்ப ஆசை. எனவே யாரிடமும் சொல்லாமல் கால்போன போக்கில் வேடிக்கை பார்த்துக்கொண்டே எங்கேயோ போய்விட்டாள். நேரமும் ஆகி இருட்டிவிட்டது. ஒருவர் அவளிடம் வந்து, பாப்பா ஏன் தனியே நிற்கிறாய். வா உங்க வீட்டில் கொண்டு போய் விட்டு விடுகிறேன். என் பைக்கில் ஏறிக்கொள் என்றார். இவளும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சற்று ஆறுதலுடன் பைக்கில் ஏறினாள். அவர் நல்லவர் போல ஜீஸ் வாங்கிக் கொடுத்து, வேறு ஊருக்குக் கொண்டுபோய் சிறுவர்களை வைத்து வித்தை காட்டும் இடத்தில் விற்றுவிட்டார். அங்கே வித்தைகளைக் கற்றுக் கொடுக்க, அடித்து சாப்பாடு கொடுக்காமல் ரிங்கிளை துன்புறுத்தினார்கள், கஷ்டங்கள் தாங்க முடியாமல் ரிங்கிள் அழுதாள். இயேசப்பாவிடம் ஜெபம் பண்ணினாள், **Sunday School** பிள்ளைகள் அனைவரும் ரிங்கிளுக்காக ஜெபித்தனர். பல மாதங்களுக்குப்பின் ஒரு ஊரில் வித்தை நடந்து கொண்டிருந்தபோது அவர்கள் ஊரிலிருந்து ஒரு பெரியவர் ரிங்கிளைப் பார்த்து அடையாளம் கண்டுகொண்டார். பின் ஊர்த்தலைவரிடம் பேசி அவளை மீட்டுக் கொண்டு வந்து வீட்டில் விட்டார். குடும்பத்தில் அளவில்லா மகிழ்ச்சி! ரிங்கிளும் தன் தவறை உணர்ந்தாள். எல்லோருடைய ஜெபத்தையும் கேட்டு இயேசப்பாதான் தன்னைக் காப்பாற்றினார் என்று நன்றியோடு அவரைத் துதித்தாள்.

அன்புச்செல்வங்களே! அம்மா அப்பாவுக்கு கீழ்ப்படிய வேண்டும். பெற்றோருடைய கட்டளைகளுக்கு மாறாக நடக்கக்கூடாது. முன் பின் தெரியாதவர்கள் எதையாவது சாப்பிட வாங்கிக்கொடுத்தாலோ, கூப்பிட்டாலோ சென்று விடக்கூடாது. பெற்றோர் செல்லக்கூடாது என்று சொல்லும் இடங்களுக்கு கட்டாயம் செல்லக்கூடாது. ஏன்? எதற்கு? என்றெல்லாம் கேள்வி கேட்காமல் கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படிந்தால் உங்கள் வாழ்வின் மேல்படிக்கு நீங்கள் வருவது உறுதி **OK, Bye!**

**ஜெபிப்போமா ?**

**அன்புள்ள இயேசப்பா அம்மா, அப்பாவுக்கு கீழ்படிந்து நடக்கும் குணத்தை எனக்கு தாங்க. கண்மணியைப் போல என்னை காத்துக் கொள்ளுங்க பிதாவே ஆமென்!**

**மனப்பாட வசனம்**

**கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். சங் 121:7**



கோவையில்

# உபவாச ஜெப முகாம்

இருளின் அதிகாரத்திலிருந்து ஜனங்கள் விடுதலையாக்கப்படவும், அவர்களுடைய மனக்கண்கள் திறக்கப்படவும், தேவனை அறிகிற அறிவு அவர்களுக்குள் வரவும் கடந்த மாதம் 3-ஆம் தேதி கோவை மாவட்டத்திலுள்ள TELC ஆலய சபா மண்டபத்தில் வைத்து நடைபெற்ற உபவாச முகாமை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். அந்த பட்டணத்தின் இரட்சிப்பிற்காக கண்ணீரோடு ஜெபிக்க கூடிய ஜெப வீரர்களை தேவன் கூட்டிச் சேர்த்து ஜெபிக்க வைத்தார். சகோதரி. கலாவின்சென்ட்ராஜ் அவர்கள் பாடல், ஆராதனை மூலம் ஜனங்களை தேவ பிரசன்னத்திற்குள் அழைத்துச் சென்றார்கள். சகோதரர். வின்சென்ட்ராஜ் அவர்கள் ஜெபத்தின் மேன்மையைப் பற்றி ஜனங்களுக்கு போதித்தார்கள் தேவ நாமம் மகிமைப்பட்டது. முகாமிற்கு வந்த மக்களை தேவன் ஜெப அக்கினியால் நிரப்பினார்.அவருக்கே மகிமை உண்டாவதாக.







## இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் புதிய பரிமானம்

# SCHOOL OF EVANGELISM

## சுவிசேஷ பயிற்சிப் பள்ளி

### வாருங்கள் சுத்த சுவிசேஷத்தை பரவச் செய்வோம்

சுவிசேஷப்பயிற்சிப் பள்ளியின் நோக்கம் என்னவென்றால் சுவிசேஷத்தை அறிவிப்பவர்கள் குறைந்து விட்டார்கள். சுவிசேஷ ஊழியம் மங்கிக் கொண்டிருக்கிறது. தேசத்தின் இருளான நிலையை மாற்ற, சுவிசேஷத்தை எங்கும் அறிவிக்கிற, சுவிசேஷ தலைமுறையை எழுப்ப வேண்டும், அவர்கள் முறையாக, தெளிவாக சுவிசேஷம் அறிவிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும், அந்த தரிசனத்தைப் பெற்றுக் கொண்டு வளர்வதற்கும், தேவன் தன் கையில் கொடுத்திருக்கும் பணியை மிகச்சிறப்பாக செய்வதற்கு உதவுவதாகும்.

**வருடத்திற்கு நான்கு அணிகளாக (ஜனவரி, ஏப்ரல், ஜீலை, அக்டோபர்) ஆகிய மாதங்களில் சுவிசேஷ பயிற்சிப்பள்ளி நடைபெறுகிறது 6 நாட்கள், 6 பயிற்சியாளர்கள்**

*பயிற்சியை பற்றிய தகவல்கள்*

- நீங்கள் மிகுந்த ஜெபத்துடன் முகாமில் பங்கு கொள்ள வேண்டும்
- பயிற்சியின் ஆறு நாட்களும் தலைசிறந்த சுவிசேஷகர்களால் உங்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.
- தினமும் இரண்டு பகுதியாக ஜெபமும், களப்பணியும் பயிற்சி தரப்படும்
- தங்கும் இடம் மற்றும் மூன்று வேலை உணவும் வழங்கப்படும்
- பெண்களுக்கு தனியாக தங்குமிடம் உண்டு.

உடனே படிவத்தை பூர்த்தி செய்யுங்கள்
soe.jesuslives.in
மேலும் தொடர்புக்கு:
9498000449

## உதவிக்காரர் ஊழியம் செய்ய ஆட்கள் தேவை

இயேசு வாழ்கிறார் ஊழியத்தில் பணிபுரிய சிறந்த வாட்ச்மேன், சமையல் வேலை செய்ய ஆட்கள் தேவை.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 9442800449**

# இயேசு தடைகளை நீக்கிப் போடுகிறவர்





## சகோதரி. எஸ்தர் (ஒட்டன்சத்திரம்)

என் மகளுக்கு பல நாட்களாகவே திருமணம் தடையாகவே இருந்து கொண்டிருந்தது. நான் சகோதரரிடமும், சகோதரியிடமும் தொடர்ந்து ஜெபிக்க கேட்டுக் கொண்டேன் அவர்களும் ஜெபித்தார்கள், தேவன் எல்லாத் தடைகளையும் நீக்கி கடந்த வருஷம் திருமணம் நடக்க உதவி செய்தார். பின்பு குழந்தை பாக்கியத்தையும் கொடுத்தார். கடந்த 10 மாதங்களாக எத்தனையே போராட்டங்கள் வந்தும் அதையெல்லாம் தாண்டி ஒரு பெண்குழந்தையைப் பெற்றொடுக்க தேவன் கிருபை செய்தார். குழந்தை பிறந்த பிறகும் கூட என் மகள் வயிற்றுப் போக்கினாலும், கால் வீக்கத்தினாலும் மிகவும் கஷ்டப்பட்டால் நாங்கள் மருத்துவமனைக்குச் செல்லவில்லை விசுவாசத்தோடு ஜெபித்தோம் தேவன் அற்புதமாய் சுகம் கொடுத்தார். தற்போது தாயும், சேயும் சுகமாயிருக்கிறார்கள். அவருக்கே கோடான கோடி நன்றி மேலும் நான் கடந்த மாதம் உபவாச ஜெபத்தில் வந்து கலந்து கொண்டு என் பேரன் சரீர சுகத்திற்காக கண்ணீருடன் ஜெபித்து விட்டு இயேசப்பா நான் அடுத்த மாதி வந்து சாட்சி சொல்ல வேண்டும் என்று சொல்லிவிட்டுச் சென்றேன். என் பேரனுக்கு கடந்த 2 மாதங்களாக தொடர்ந்து சளி, இருமல் இருந்து கொண்டே இருந்தது. எவ்வளவோ மருந்து மாத்திரைகள் கொடுத்தும் இருமல் நிற்கவே இல்லை. ஒருநாள் இரவில் இருமல் வந்தவுடன் அவனால் மூச்சுவிடமுடியாமல், கண்கள் மேல் நோக்கி சென்று மிகவும் கஷ்டப்பட்டான். இரவு 10 மணி நாங்கள் இருந்த ஊரிலிருந்து மருத்துவமனைக்கு வரமுடியாத நிலையில் இயேசுவை நோக்கிக் கூப்பிட்டோம், தேவன் அவன் அழுகையின் சத்தத்தைக் கேட்டார். தேவகரம் அவனைத் தொட்டது. அன்று இரவே அவன் பரிபூரண சுகமடைந்தான். அவனுக்கு தேவன் கொடுத்த புது ஜீவனுக்காக, சுகத்திற்காக அவருக்கு கோடி ஸ்தோத்திரம்.



## சகோதரி. பியூலாமேரி (திண்டுக்கல்)

நான் இயேசுவை அறிந்தவள், என் கணவர் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. என் மகளின் திருமணகாரியத்தைக் குறித்து பேசும் போதெல்லாம் அவர் நான் விரும்புகிறபடிதான் என் மகளின் திருமணத்தை நடத்துவேன், என் உறவினர்கள் சொல்வதைதான் கேட்பேன் என்பார். நான் வானத்தின் வாசல் உபவாச ஜெபத்திற்கு வந்து கண்ணீரோடு ஜெபித்துவிட்டு சென்றேன். தேவன் ஜெபத்திற்கு பதில் தந்து அற்புதம் செய்தார். இரட்சிக்கப்பட்ட இயேசுவை அறிந்த ஒரு நல்ல மணமகனை தந்தார். கடந்த செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதி திருமணம் நடக்க தேவன் கிருபை செய்தார். தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O) :** இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# நடப்பு ★★★★★★ செய்திகள்

## பட்டாம்பூச்சிகளின் எண்ணிக்கை குறைவதால் மனிதர்களுக்கு என்ன ஆபத்து?

பட்டாம்பூச்சிகளை பொறுத்தவரை, அவை பார்ப்பதற்கு அழகாக இருப்பதையும் தாண்டி அவற்றால் சுற்றுசூழலுக்கு நன்மைகள் பல விளைகின்றன. அத்தகைய நன்மைகளைப் பயக்கும் பட்டாம்பூச்சிகள் எண்ணிக்கையில் குறைந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இது பூமியின் சுற்றுச்சூழலில் என்ன விளைவை ஏற்படுத்தும்? பட்டாம்பூச்சி, தேனீ, குளவி போன்ற மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் உயிரினங்கள் எண்ணிக்கையில் குறைவது உணவு உற்பத்தியை பாதிக்குமா? இன்றைய சூழலில், பட்டாம்பூச்சிகளின் எண்ணிக்கை 'கவலைக்குரிய வகையில் குறைவாக உள்ளதாகவும்' தொடர்ந்து குறைந்து வருவதாகவும் பிரிட்டனிலுள்ள சூழலியலாளர்கள் எச்சரித்துள்ளனர். 'பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்படும் வேளாண் நிலங்களில் அந்த வேதிமங்களின் விளைவாக அவற்றின் எண்ணிக்கை குறைகிறது. 'மேற்குத்தொடர்ச்சி மலையில் 340க்கும் மேற்பட்ட பட்டாம்பூச்சி வகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள், 'சுமார் 320 வகைகள் தமிழகத்தில் காணப்படுவது பதிவாகியுள்ளது,' அடர்த்தியான காடுகள், பாதுகாக்கப்பட்ட காடுகளில் பட்டாம்பூச்சிகளின் எண்ணிக்கை ஆரோக்கியமாக உள்ளது. ஆனால், அதே நிலை கிராமப்புறங்களிலோ நகர்ப்புறங்களிலேயோ இல்லை. ஒரு கிராமம் மலைப்பகுதியிலோ அல்லது பாதுகாக்கப்பட்ட பகுதியிலேயோ இருந்தாலும்கூட, அங்கு பூச்சிக்கொல்லிகளும் செயற்கை உரங்களும் உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுவதால் பட்டாம்பூச்சிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது,' வலசை என்பது பட்டாம்பூச்சிகளின் பெருக்கத்தைப் பொறுத்து மாறுபடும். அவற்றின் இனப்பெருக்கம், அவை இருக்கும் இடத்தில் நல்ல சூழல் மற்றும் உணவுக்கான தாவரங்கள் கிடைக்கும்போது நன்றாக நடக்கும். மழைப்பொழிவு இல்லையென்றால், தாவரங்கள் செழுமையாக இருக்காது, உணவு கிடைக்காது அது இடப்பெயர்வையும் பாதிக்கும். வடகிழக்கு பருவமழை தொடங்கும்போது கிழக்குத் தொடர்ச்சி மலையில் மழைப்பொழிவு அதிகமாக இருக்கும். அப்போது அங்கிருந்து மேற்குத்தொடர்ச்சி மலைக்கு இடம் பெயரும். ஆகவே, மழைப்பொழிவுக்கும் பட்டாம்பூச்சிகளின் வலசைக்கும் தொடர்புண்டு. 2020ஆம் ஆண்டில், இமயமலை பகுதியில் வாழும் பட்டாம்பூச்சிகளும் அந்துப்பூச்சிகளும் வெப்பநிலை உயர்வு காரணமாக மலையில் சராசரியாகப் பார்க்கும் பகுதியிலிருந்து சுமார் 1,000 மீட்டர் உயரத்தில் காணப்பட்டதாக 'ஸூவாலஜிக்கல் சர்வே ஆஃப் இந்தியா' மேற்கொண்ட கணக்கெடுப்பில் தெரியவந்தது. அந்தக் கணக்கெடுப்பில் 49 வகை அந்துப்பூச்சிகளும் 17 வகையான பட்டாம்பூச்சிகளும் இதுவரை அவை காணப்படாத உயரத்தில் பதிவு செய்யப்பட்டன. சில அந்துப்பூச்சிகள், 2,000 மீட்டருக்கும் மேலான உயரத்தில் பதிவு செய்யப்பட்டன. இதற்கு காலநிலை நெருக்கடியால் உயரும் வெப்பநிலை ஒரு முக்கியக் காரணம் என்று கூறப்பட்டது.
பிரிட்டனின் மிகப்பெரிய மக்கள் அறிவியல் திட்டங்களில் ஒன்றான பட்டாம்பூச்சிகள் கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக சுமார் 100,000 பட்டாம்பூச்சிகள் பதிவு செய்யப்பட்டன

**ஜெபம்:** தேவனால் படைக்கப்பட்ட எந்த ஒரு படைப்பிலும் பல நன்மைகள் இருக்கும் அவை காலப்போக்கில் அழிந்து போகாமல் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai


தூத்துக்குடி
முழு இரவு ஜெபம்
நவம்பர்
5
சனிக்கிழமை
10 PM - 04 AM
இடம்
ராஜ் மஹால்
பழைய பேருந்து நிலையம் அருகில்,
தூத்துக்குடி.
Evg.L.Vincentraj
Evg.KalaVincentraj
தொடர்புக்கு 94428 00449 , 94428 00447
செம்பட்டியில்
உபவாச ஜெபம்
நவம்பர்
12
@10:00AM
இடம்
வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்
Evg.KalaVincentraj
Evg.L.Vincentraj
தொடர்புக்கு 94428 00449 , 94428 00447

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S




If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.